செ.வெ.எண்:41 நாள்:12.08.2017

**திருநெல்வேலி மாவட்டத்தில் விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தில் பயனாளிகள் தேர்வு தொடர்பான ”கிராம நிலைக்குழு கூட்டம்” மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 2017-2018-ம் ஆண்டிற்கு விலையில்லா வெள்ளாடுகள் - செம்மறி ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தில் பயனாளிகள் தேர்வு தெடர்பான கிராம நிலைக்குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திப்நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (12.08.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

திருநெல்வேலி மாவட்டத்தில் ஆகஸ்டு மற்றும் அக்டோபர் மாதத்தில் தலா 1 ஊராட்சியில் கறவை பசுக்கள் மற்றும் தலா 16 ஊராட்சிகளில் செம்மறி ஆடுகள் அல்லது வெள்ளாடுகள் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 19 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கிராம ஊராட்சிகளை தேர்வு செய்து சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்தி பயனாளிகளை தேர்வு செய்ய வேண்டும். ஆகஸ்டு மாதத்தில் 50 கறவை பசுக்களும் 1024 பயனாளிகளுக்கு ஆடுகளும் வழங்கப்படவுள்ளது. அக்டோபர் மாதம் 50 கறவை பசுக்களும் 1007 நபர்களுக்கு ஆடுகளும் வழங்கப்படுகிறது. கறவை பசுக்களுக்கு தலா 35000 வீதம் 100 பசுக்களுக்கு ரூ.35.00 இலட்சமும், ஆடுகள் வாங்க தலா ரூ.10000 வீதம் 2031 நபர்களுக்கு **ரூ.2கோடியே** 31 இலட்சம் மதிப்பிலும் வழங்கப்படவுள்ளது. இப்பணிகளை துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்களும், கிராம நிலைக்குழு உறுப்பினர்களும் அரசு விதிமுறைகளின் முழுமையாக கடைபிடித்து தகுதியான நபர்களை தேர்வு செய்திட வேண்டும். தேர்வுகள் வெளிப்படை தன்மையுடன், ஏழை எளிய மக்களுக்கு உதவிடும் வகையிலும் இருக்க வேண்டும். இப்பணிகளில் அனைவரும் ஒருங்கிணைந்து தகுதியானவர்களை தேர்வு செய்திட வேண்டும் எனப் பேசினார்.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, கால்நடைத்துறை இணை இயக்குநர் திரு.ராஜேந்திரன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு. கல்யாணசுந்தரம், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர்கள் திரு.ஆர்.குருசாமி, திரு.பி. சங்கரகுமார், திரு. அருணாசலகணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.**